# நித்திய ஜீவன்

## தேவனுடைய ஈவு

● "தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்".

1 யோவான் 5 : 11.

● "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்".

ரோமர் 6 : 23.

● "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்".

யோவான் 3 : 16.

● "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு (நித்திய மரணத்தினின்று) இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; இது கிரியைகளினால் உண்டானதல்ல".

எபேசியர் 2 : 8—9.

● "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை".

யோவான் 10 : 27—28.

# நித்திய ஜீவன்

## விசுவாசத்தினுல் கிடைப்பது

● "நாம் அவருடைய குமாரனுகிய இயேசு கிறிஸ்து வின் நாமத்தின் மேல் விசுவாசமாயிருப்பதே தேவ னுடைய கற்பனையாயிருக்கிறது".
1யோவான் 3 : 23.

● "உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் எவனும் என்றென்றைககும் மரியாமலும் இருப் பான்". யோவான் 11 : 26.

● "சர்ப்பமானது மோசேயினுல் வனுந்தரத்திலே உயர்த்தப்பட்டது போல மனுஷ குமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனே அவன் கெட்டுப் போகா மல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப் படவேண்டும்". யோவான் 3 : 14—15.

● "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி; அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்".
அப்போஸ்தலர் 16 : 31.

● "விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று நீதிமானுக்கப்படுகிறுன்". அப்போஸ்தலர் 13 : 39.

● "ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதி மானுக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனு யிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்". ரோமர் 4 : 5.

# நித்திய ஜீவன்

## நம்முடைய தெரிந்து கொள்ளுதலே யன்றி, தானுக வருவதல்ல

● "நான் உனக்கு முன் ஜீவனையும், மரணத்தை யும் வைத்தேன்; ஆகையால் ஜீவனைத் தெரிந்து கொள்". உபாகமம் 30 : 19.

● "அவரை (கிறிஸ்துவை) விசுவாசிக்கிறவன் ஆக்கினைகுள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசி யாதவனே, தேவனுடைய ஒரே பேறான குமார னுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனுயிராதபடி யினுல், அவன் ஆக்கினைத் தீர்ப்புக் குட்பட்டா யிற்று". யோவான் 3 : 18.

● "அவரை (கிறிஸ்துவை) ஏற்றுக்கொண்டவர் கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவ னுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதி காரங் கொடுத்தார்". யோவான் 1 : 12.

● "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனுயிருக்கிறுன்; குமாரனை விசுவாசியாதவனே ஜீவனைக் காண்பதில்லை, தேவ னுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்".
யோவான் 3 : 36.

● "முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப் பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதுமான, இவ்வளவு பெரி தான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப் போமானுல் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்". எபிரெயர் 2 : 3.

# நித்திய ஜீவன்

## தற்போதைய உடைமை

● " உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும் (எதிர் நோக்குகிறதல்ல) தேவ குமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன் ".
1யோவான் 5 : 13.

● " என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல் (நித்திய) மரணத்தை விட்டு நீங்கி, (நித்திய) ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் ". யோவான் 5 : 24.

● " குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன் ". 1யோவான் 5 : 12.

**The Light of Hope**
Cheppad P.O., Alappuzha Dist - 690 507
Kerala State, India

Tamil-2